**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-050420213869

Volume: 5

Issue: 4

Month: April

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.01.2021

Accepted: 25.03.2021

Published: 01.04.2021

Citation:
Shobana, H., and L. Salini. "Kurunthogai Leader and Sigmund Freud's Theory". *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 4, 2021, pp. 38–42.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i4.3869

*Corresponding Author:
shobana.gac@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kurunthogai Leader and Sigmund Freud's Theory

**H. Shobana**
*Assistant Professor, Tamil Department*
*Government Arts College, Ooty, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-8985-1615

**L. Salini**
*Ph.D. Research Scholar, Tamil Department*
*Government Arts College, Ooty, Tamil Nadu, India*

**Abstract** - All the ancient Tamil poets of the ancient time were intrigued by the nature of the world without compromising on it. They were amazed at the beauty of the world. Instead of distorting the nature of the world in a way that suited their mental state, they enjoyed expanding and explaining their memory to suit their knowledge through the beauty of the worldly nature. Thus it is the Sangam literatures that add pride to Tamil literature. One of those descriptions is that the hero of Kurunthogai and it explains his feelings. The mental unity of the lovers is the lifeblood of the Agathinai. If the stolen norm of stolen lovers is marriage, it is called morality. (C. Maheswari, Society in Paripathal, pp. 4, 5). Thus, this review article reveals how songs that highlight the leader's psychology have been incorporated and explored into the psychological theory of psychologist Sigmund Freud.

**Key Words:** Kurunthogai, Sigmund Freud, Tamil Literature, Agathinai, Nanneri, Psychological Theory

**References**

1. Nagarasan, V. (2004). *Kurunthogai Moolamum Uraium*. Chennai, New Century Book Hours Pvt. Ltd.
2. Gowmareeswari. (2005). *Tholkapiyam*. Chennai, Gowra Agency.
3. Varathanar. (1949). *Thirukural*. Chennai, Appar Achagam.
4. Ravinthiran, K. (2005). *Sigmund Freud*, Psycho Analysis, Chennai, Alaigal Veliyitagam.
5. Chandramohan. (1961). *Sinthanaiyalar Freud*, Chennai, Prema Prasuram.
6. Puliurthesigan. (2010). *Kurunthogai Moolamum Uraium*, Chennai, Saratha Pathipagam.

# குறுந்தொகைத் தலைவனும், சிக்மண்ட் பிராய்டின் பண்படா உள்ளமும்

***முனைவர் எச். ஷோபனா***
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலம்

***ல. சாலினி***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலம்

***முன்னுரை***

*சங்ககாலத்துச் செந்தமிழ்ப் புலவர் இயற்கைத் திறம் பிறழாமல் அதனை நுணுகி ஆராய்ந்து பாட்டுப் பாடும் மனவுறுதி மிகுதியுமுடையவராயிருந்தனர். இயற்கையில் காணப்படும் எழிலைக் கண்டு மிகவும் வியந்தனர். தம் மன உணர்விற்கு இசைந்தவண்ணமெல்லாம் இயற்கையினைத் திரித்துக் கூறாமல், இயற்கையின் அழகின் வழியே அறிவினைப் பொருந்த வைத்துத் தம் நினைவினை விரிவுசெய்து விளக்கினர். குறுந்தொகை தலைவன், தலைவியரது உணர்வுகளின் இருப்பிடமாகத் திகழ்கின்றது. காதலர்களின் மன ஒற்றுமையே அகத்திணையின் உயிர்ப்பாக அமைகிறது. களவில் மறைந்தொழுகிய காதலர்களின் களவு நெறி திருமணமாக முடியுமாயின் அதனை நன்னெறி என்பர். அவ்வகையில் தலைவனது மனவியல்பைப் புலப்படுத்தி நிற்கும் பாடல்கள் உளவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்டின் உளவியல் கோட்பாட்டுக்குள் பொருந்தி ஆராய்வதை இவ்வாய்வுக் கட்டுரை வெளிப்படுத்துகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *குறுந்தொகை, சிக்மண்ட் பிராய்டு, தமிழிலக்கியம், அகத்திணை, நன்நெறி, உளவியல் கோட்பாடு*

## பண்படா உள்ளமும் (ID), குறுந்தொகைத் தலைவனின் செயல்பாடும்

பண்படா உள்ளத்தின் தூண்டுதல் ஆற்றல் இன்பத்தை மையமாகக்கொண்டது. Libido என்ற பாலுணர்வின் வயப்பட்டது. libido கீழ்த்தர மகிழ்ச்சி பெறுவதை நோக்கமாகக் கொண்டது. இது ஒழுங்கு நன்னடத்தை, கட்டுப்பாடு இவற்றில் ஈடுபாடு கொள்ளாப் பகுதியாகும். அதிர்ச்சியூட்டும் உணர்ச்சியின் உறைவிடமாகும். இன்பநிலை உணர்வுகளுக்கேற்ப இயல்பூக்கங்களின் தேவைகளுக்கு நிறைவு தேடுகின்ற ஆளுமையின் அடித்தளமாகச் செயல்படுவது. வாழ்வில் பூர்த்தியாகாத எண்ணங்கள், ஆசைகள், பாலுணர்வுகள், எல்லாம் இதைச்சாரும். இது நனவிலி மனத்தில் Unconscious mind இருந்து கொண்டு செயல்படுகிறது. மனிதரில் ஏற்படும் சகலவிதமான ஆசைகள், உணர்வுகள் என்பவற்றிற்குக் காரணமாக அமைவது இந்த உணர்வு உந்தும் இயல்பினது பிரதான செயல்பாடாகும். சிக்மண்ட் பிராய்டின் கருத்துப்படி பண்படா உள்ளத்தின் செயல்பாடானது மனித வாழ்வில் இன்பம் அடைதலைப் பூர்த்தி செய்வதாகவே உள்ளது. இது வெளி உலகைப் பற்றி, யதார்த்த நிலைமைகளைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. அதிகமான பாலுணர்வு கொண்டவர்களிடம் பண்படா மனத்தின் ஆதிக்கம் காணப்படும். அவ்வகையில், இக்கட்டுரை குறுந்தொகைத் தலைவனிடம் வெளிப்பட்டு நிற்கும்

பண்படா உள்ளத்தின் செயல்பாட்டினைப் பதிவு செய்துள்ளது.

**பண்படா உள்ளமும் தலைவனின் செயல்பாடும்**

குறுந்தொகைப் பாடல்கள், குறிஞ்சித்திணைத் தலைவனிடம் பண்படா உள்ளத்தின் பாலுணர்வாற்றல் வெளிப்படுவதை முன்னிலைப்படுத்துகின்றன. தலைவியை எவ்வாறேனும் அடையத்துடிக்கும் தலைவனின் விருப்ப விழைவு புலப்படுவதைப் பாடல்களில் காணமுடிகிறது. தலைவியினுடைய தோழியின் மூலம் தலைவியை அடைந்து விடலாம் என்று முயற்சிக்கிறான் தலைவன். ஆனால் தோழியோ குறை மறுத்துவிடுகிறாள். உடனே தலைவன். தோழியாகிய நீ உதவாமற் போயினும் மன்றிலே மடன்மா ஊர்ந்து வந்து தலைவியைப் பெறுவேன் எனத் தலைவன் தன் மிகுந்த காதலை வெளிப்படுத்துகிறான். அவ்வாறு எடுத்துரைப்பது தலைவனின் பண்படா உள்ளத்தினை வெளிக்காட்டுகிறது. இதனையே இப்பாடல்,

**"அமிழ்து பொதி செந்நா அஞ்சவந்த**
**வார்ந்து இலங்குவையெயிற்று சின்மொழி அறிவையைப்**
**பெருகதில் அம்மயானே! பெற்றாங்கு**
**அறிகதில் அம்மயானே! பெற்றாங்கு**
**"நல்லோள் கணவன் இவன்; என்ப**
**பல்லோர் கூறயா அம்நாணுகம் சிறிதே"**
**குறுந்தொகை- பா. 14, ப.47**

என்று கூறுகிறது.

**"தோழீ நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி**
**மடல்மாகூறும் இடனுமாருண்டே**
**தொல்-களவு .நூ.11, ப.170**

என்னும் தொல்காப்பியக் கூற்றுப்படி தலைவியை அடைய விரும்பித் தலைவன் மடலேறுகின்றான். இதனையே

**மாவென்மடலும் ஊர்ப; பூனைக்**
**குவிமுகிழ் எருக்கங்கண்ணியும்சுடுப;**
**மறுகின் ஆர்க்கவும்படுப;**
**பிறிதும் ஆகுப - காமம் காழ்க்கொளினே**
**குறுந்தொகை-பா.17, ப.55**

என்னும் பாடல் கூறுகிறது.

**"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடல் அல்லது இல்லைவலி"**
**குறள்- 1131, ப.233**

காமத்தால் துன்புற்று வருந்தினவர்க்குக் காவல் மடலூர்தல் அல்லாமல் வலிமையான துணை வேறொன்றும் இல்லை என்பது திருவள்ளுவரின் கூற்றாகும்.

**கொங்குதேர் வாழ்க்கைஅம்சிறைத்தும்பி**
**காமம்செப்பாது, கண்டது மொழிமோ ;**
**பயிலியது கெழீஇயநட்பின், மயிலியல்,**
**செறிஎயிற்று, அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ, நீ அறியும் பூவே?**
**குறுந்- பா- எண்- 2, ப- 9**

மேற்கண்ட பாடலின் வழியாக, தலைமகளை இயற்கைப் புணர்ச்சிக் கண் இடையீடு பட்டு நின்ற தலைமகன், தலைவியின் நாணின் நீக்குதற் பொருட்டு, மெய்தொட்டுப் பயிறல் முதலாயினவும், தலைவியின் கூந்தல் இயற்கையிலேயே மணம் உடையது எனவும், இயற்கைப் புணர்ச்சிக்குப் பின், தன் அன்பு வெளிப்படுமாறு, தலைவன் தலைவியின் நலத்தினைப் பாராட்டுகிறான். இப்பாடலில் தலைவனின் பண்படா உள்ளம் வெளிப்படுவதை அறிய முடிகிறது.

மேலும்,

**நல்உரை இகந்து, புல்உரைதா அய்,**
**மெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல**
**உள்ளம் தாங்கா வெள்ளம் நீத்தி,**
**அரிது அவாவு அற்றனை- நெஞ்சே! நன்றும்**
**பெரிதால்அம்ம,நின்பூசல்,உயர்கோட்டு**
**மகவுடைமந்தி போல**
**அகன் உறத்தழீஇ கேட்குநர்ப் பெறினே**
**குறுந்- பா-- 29,ப- 84**

மேற்கண்ட பாடலில் தலைவியின் தழுவுதலைப் பெறுவதற்கு விரும்பிய தலைவன் தன் விருப்பத்தை உரைக்கும்போது, "மகவுடைமந்திபோல" என்று உவமிக்கும் திறம் சுவையானது ஆகும். தாயின் அடிவயிற்றோடு அனைத்துப் பற்றிக்கிடக்கும் மந்தி போலத் தலைவியைப் பிரியாது கூடியருப்பதனை விரும்புகின்றான். தலைவியை விரைந்து வந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கூறிய தோழியின் நல்லுரையை நினைக்காமல், களவினை நீட்டிக்க விரும்புவது தலைவனின் பண்படா உள்ளத்தினை வெளிக்காட்டுகிறது.

***தோழியால் வரைவுகடாவப் பட்டபின்னரும்***
***தலைவன் களவொழுக்கம் வேண்டும் கூறியது***
***தொல்- களவுநூ. - 17,ப. 183***

என்னும் தொல்காப்பியரின் கூற்று இங்கு நினைவுக்கூறத்தக்கது.

தோழியின் வாயிலாகத் தலைவியைப் பெற எண்ணித்தோழியை தலைவன் இரந்து நின்றான். அவனது வேண்டுதலை ஏற்றுக் கொண்ட தோழியைப் பார்த்து நான் தலைவியைப் பிரிந்திருக்கவும் அற்றேன். நான் வாழ்கலும் இயலாது ஆதலின் உயிர் நீத்தல் நன்று என்றும் கூறிவருந்துவது தலைவனின் பண்படா உள்ளத்தினையே காட்டுகின்றது. இதனையே,

***காலையும், பகலும், கைபறுமாலையும்,***
***ஊர்துஞ்சுயாம்மும், விடியலும், என்றுஇப்***
***பொழுது இடைதெரியின் பொய்யே காமம்***
***மாஎனமடலொடு மறுகில் தோன்றித்***
***தெற்றெனத்துற்றலும் பழியே;***
***வாழ்தலும் பழியே - பிரிவு தலைவரினை.***
***குறுந்- பா.எண்-32- ப- 19***

என்னும் பாடல் விளக்குகின்றது.

***காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி***
***மாலை மலரும் இந்நோய்.***
***குறள்- 1227, ப- 251***

இந்தக் காமநோய், காலைப்பொழுதில் அரும்பாய்த் தோன்றி, பகற்பொழுதெல்லாம் வளர்ந்து மாலைப் பொழுதில் மலர்கின்றது, என்று திருவள்ளுவரும் இந்நோயின் தன்மையினைக் கூறியுள்ளார்.

மேலும்

***யாயும் ஞாயும் யார்ஆகியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்?***
***செம்புலப்பெயல்நீர்போல***
***அன்புடைநெஞ்சம்தாம்கலந்தனவே***
***குறுந்- பா.எ- 40, ப-109***

என்னும் பாடலின் வழியாக, என் தாயும் உன்னுடைய தாயும் என்ன உறவினர்? என்னுடைய தந்தையும், உன்னுடைய தாயும் என்ன உறவினர்? நானும், நீயும் எக்குடி வழியைச் சார்ந்தவரோ அறியோம். செம்மண் நிலத்தில் பெய்தமழைநீர், அம்மண்ணோடு கலந்து, தன்னுடைய தன்மை மாறி ஒன்றுபடுவது போல, தம்முடைய இருவர் உள்ளங்களும் தம்முள் கலந்து ஒன்றாயின. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர் பிரிந்து விடுவோமோ என அஞ்சிய தலைமகளிடம் தலைவன் இவ்வாறு எடுத்தியம்புவது தலைவனின் பண்படா உள்ளத்தினை வெளிக்காட்டுகிறது.

பிறிதொரு பாடலில், வேனில் காலத்தில் வெம்மையில், பாறையில் வைக்கப்பட்ட வெண்ணெய் உருகிப் பரவிப்பாழாதல் கண்டு, ஊமன், தன்னுடைய வாய்க் குறைபாட்டினால் அதனைப் பிறரிடம் எடுத்துக்கூற இயலாமல் போவதும், தன்கண் எதிரிலேயே அப்பொருள் பாழ்படுவதைப் பார்த்து வருந்துதல் ஒன்றே அவனால் செய்ய இயலும். அது போலத் தன்னுடைய காமத்தால் ஏற்பட்ட நோயினை, அடக்கிக்கொள்ளும் ஆற்றலும், பிறரிடம் வெளியிடும் துணிவும் இல்லை. எனத் தலைவன் பாங்கனிடமும் கூறி, பாங்கனுடைய கை, தலைவியின் கைப் போலத் தனக்கு

இன்பம் செய்யாமையின் கையில்லாதவன் என்றும், தலைவியைப் பெற எவ்வகை உறுதியும் வழங்காமையால் ஊமன் என்றும் குறிப்பிட்டால் கை, கால், கண் ஆகிய எல்லா உறுப்புகளைப் பெற்றிருந்தும், நீ என்னுடைய காமத்தினைப் போக்க உதவ வில்லையே என்பது தலைவன் பாங்கனிடம் உரைக்கும் கூற்றாகும். இக்கூற்றில் தலைவனின் பண்படா உள்ளத்தினை அறிய முடிகிறது.

**இடிக்கும் கேளிர்! நும்குறைஆக**
**நிறுக்கல் ஆற்றினோ நன்று மற்றில்ல;**
**ஞாயிறு காயும் வெவ்வறை மருங்தில்**
**கைஇல் ஊமன் கண்ணின் காக்கிம்**
**வெண்ணெய்உணங்கல் போல**
**பரந்தன்று, இந்நோய்; நோன்று கொளற்கு அரிதே**
**குறுந்- பா.- 58, ப- 150**

என்னும் பாடல் வழி அறியலாம்.

**ஒடுங்குஈர்ஓதி, ஒண்றுதற்குறு மகள்**
**நறுந்தண்நீரள்; ஆர்அணங்கினளே;**
**இணையள் என்று அவட்புனை அளவுஅறியேன்;**
**சிலமெல்லியவேகிளவி;**
**அனைமெல்லியள்யான் முயங்குங்கானலே**
**குறுந்- பா.- 70, ப-175**

மேற்கண்ட பாடலின் மூலம் தலைவன் தலைவியைக் களவுக் காலத்தில் தழுவும்போது, கூந்தல், நுதல், மெய்யெங்கும் பரவியுள்ள இளமை இவற்றால் கண்ணிற்கும், நறுமையால் மூக்கிற்கும் இன்பம் தந்தன. மேலும் அவளை தழுவாதபோது பொருத்தற்கரிய வருத்தம் ஏற்படுகிறது எனத் தலைவன் தன் ஏக்கத்தினை தன் நெஞ்சிடம் கூறுவது தலைமகனின் பண்படா உள்ளத்தினை வெளிக்காட்டுகிறது.

**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள.**
**குறள்- 1101, ப- 227**

என்னும் திருக்குறளின் கூற்று. இங்கு நினைவுக்கூறத்தக்கது.

குறுந்தொகையில் தலைவன் கூற்றுப் பாடல்களில் பண்படா உள்ளத்தின் செயல்பாடு 38 பாடல்களில் பதிவாகியுள்ளது. இன்ப உணர்வுகளுக்கு உடனே நிறைவு அளித்தலே இட்டின் இயல்பாகும். பாடல்களில் தலைவியுடன் கூடி இன்பம் துய்க்க என்னும் தலைவனின் பாலுணர்வாற்றலே வெளிப்படுகிறது. எனவேதான், தோழியை இரந்தாவது அல்லது பாங்கனை இரந்தாவது தலைவியைப் பெறலாம் என்று நினைக்கிறான் தலைவன்.

## முடிவுரை

இட் என்னும் பாலுணர்வாற்றல் வெளிப்பட்டு நிற்கும் பாடல்கள் மட்டுமே இவ்வாய்வுக் கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. உளவியல் அறிஞர் சிக்மண்டு பிராய்டின் பண்படா உள்ளச் செயல்பாடானது குறுந்தொகைத் தலைவனை எவ்வாறு செயல்படுத்துகிறது என்பதை அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. நாகராசன், வி. (2004). குறுந்தொகை மூலமும் உரையும். சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
2. கௌமாரிஸ்வரி.(2005).தொல்காப்பியம். சென்னை, கௌரா ஏஜென்ஸிஸ்.
3. வரதராசனார். (1949). திருக்குறள். சென்னை, அப்பர் அச்சகம்.
4. இரவிந்திரன், கு. (2005). சிக்மண்ட் ஃபிராய்ட், உளப்பகுப்பாய்வு அறிவியல், சென்னை, அலைகள் வெளியீட்டகம்.
5. சந்திரமோகன். (1961). சிந்தனையாளர் பிராய்டு. சென்னை, பிரேமா பிரசுரம்.
6. புலியூர்க் கேசிகன். (2010). குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை, சாரதா பதிப்பகம்.